**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**TAMIL VIRTUAL ACADEMY**

**மேற்சான்றிதழ்க் கல்வி (Higher Certificate Course)**
**HG30 – நிலை III (Grade III)**

**நேரடி எழுத்துத் தேர்வு (Written Examination)**
**ஜூலை – ஆகஸ்டு 2020**

**நேரம் : 2.30 மணி** **மதிப்பெண் : 75**

**பகுதி – அ**

**I. எல்லா வினாக்களுக்கும் ஒரு சொல் / தொடரில் விடை தருக.**
*Answer all questions in a word / line.* **(10 x 1 = 10)**

1. பறவைகள் இறைவனை எவ்வாறு துதி செய்யும்?
2. மக்கள் வாழ்வில் சிறப்பிடம் பெறுவது எது?
3. வெற்றிப்பெற வேண்டுமானால் செய்ய வேண்டியது யாது?
4. ஐந்து வேர்களுக்கு வழங்கும் பெயர் என்ன?
5. சோழனின் ஆணைச்சக்கரம் போல வலம் வருவது எது?
6. திருக்குறள் எத்தனை பெரும் பகுப்புகளைக் கொண்டுள்ளது?
7. குறிஞ்சி நிலத்திற்குரிய நிலம் யாது?
8. கடுவாய் என்பது என்ன?
9. 'வலவன் ஏவா வான ஊர்தி' என்ற சொற்றொடர் உள்ள இலக்கியம் எது?
10. இரண்டாம் வேற்றுமைக்குரிய உருபு என்ன?

**பகுதி – ஆ**

**II. எவையேனும் பத்து வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் மூன்று வரிகளில் விடை தருக.**
*Answer any ten questions in three lines each.* **(10x2=20)**

1. மழை பெய்வதற்கான அறிகுறிகள் என்னென்ன?
2. 'சுதந்திர தேவியை மறவேன்' என பாரதியார் கூறும் செய்தி யாது?
3. இளங்கோவடிகள் இளமையிலேயே ஏன் துறவு பூண்டார்?
4. நடுகல் என்பது என்ன?
5. சான்றோர்க்கு அணி யாவது யாது?
6. கல்லணை எந்த ஆற்றின் குறுக்கே யாரால் கட்டப்பட்டது?
7. துன்பம் உடையது யாது?
8. தமிழின் தனிச்சிறப்பு என்ன?
9. இரட்டுற மொழிதல் பாடலில் உள்ள கருப்பொருள்கள் யாவை?

10. சுப்புரத்தினம் தம் பெயரை மாற்றிக் கொண்டது ஏன்?
11. மக்களின் வாழ்வு நிலையைத் தீர்மானிப்பது எது?
12. தமிழ்நாடு யாரை எல்லாம் வாழ்விக்கிறது?
13. பொருள்கோள் என்றால் என்ன?
14. தாவர உறுப்பு பற்றிய மரபுக்கு இரண்டு எடுத்துக்காட்டுகள் தருக.
15. முல்லை நில மக்களுக்குரிய தொழில்கள் யாவை?

## பகுதி – இ

**III. எவையேனும் <u>ஐந்து வினாக்களுக்கு</u> ஒவ்வொன்றிற்கும் <u>ஆறு வரிகளில்</u> விடை தருக.**
*Answer any five questions in six sentences each.* **(5x4=20)**

1. குற்றாலம் – குறிப்பு வரைக.
2. "புலியை விரட்டத் துப்பில்லாதவர்கள் என்னை விரட்டுகிறார்கள்" என்று மணி சொல்லிக் கொண்டே ஓடியது ஏன்?
3. 'சினம் விடுக' – என நான்மணிக்கடிகை கூறும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.
4. பாம்பும் எள்ளும் ஒன்றே என்பதை விளக்குக.
5. விகாரப்புணர்ச்சி என்பது யாது? விளக்கி எடுத்துக்காட்டு தருக.
6. கலம்பகம் என்றால் என்ன?
7. சொற்பொருள் பின்வரு நிலையணியை எடுத்துக்காட்டுத் தந்து விளக்குக.
8. ஐந்து நிலங்களுக்கும் உரியப் பெரும் பொழுதுகளை எழுதுக.

## பகுதி – ஈ

**IV. ஏதேனும் <u>ஒன்றனுக்குப் பதினைந்து வரிகளில்</u> விடை தருக.**
*Answer any one of the following questions in fifteen sentences.* **(1x10=10)**

1. வான ஊர்தி பற்றிய செய்திகளைத் தொகுத்தெழுதுக.
2. முக்கூடற்பள்ளு பாடல் கருத்தினைத் தொகுத்து எழுதுக.
3. எட்டுவகை பொருள்கோள்களை விளக்கி வரைக.

## பகுதி – உ

**V. ஏதேனும் <u>ஒன்றனுக்கு மூன்று பக்கக்</u> கட்டுரை வடிவில் விடை தருக.**
*Write an essay in three pages to any one of the questions.* **(1x15=15)**

1. "காவிரி ஆற்றின் வரலாற்றினை" உம்பாடப் பகுதி வழி நின்று தொகுத்து ஒரு கட்டுரை வரைக.
2. அறுவகை வினாக்கள், எட்டுவகை விடைகளை விளக்கி எழுதி எடுத்துக்காட்டுகள் தருக.

******